# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***

***SESSIONS CASE NO.495/ 2022***

Deposition of Witness for Prosecution :: **P.W.6**

| | | |
|---|---|---|
| பெயர் | – | மகாராஜன் |
| தந்தை பெயர் | – | |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tr. P.Maridoss in accordance with the Provisions of Act X of 1873 on **the 10th day of September 2024.**

(Accused present.)
(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் மீனாட்சிபுரத்தில் குடியிருந்து இறைச்சி கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். என் கடையில் இவ்வழக்கில் இறந்துபோன மாயாண்டி வேலை பார்த்து வந்தார். ஆடுகளையும் வாங்கிக் கொண்டு வந்து எனது கறி கடைக்கு கொடுப்பார். அவர் ஆடு வாங்கிக் கொடுத்த வகைக்கு நான் அவருக்கு ரூ.8000/– கொடுக்க வேண்டியிருந்தது. 26.6.2022 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு நான் அவர் கேட்டதால் ரூ.8000/– கொடுத்தேன். அதோடு ரூ.500/– சம்பளமும் சேர்த்து கொடுத்தேன். அவர் அதை வாங்கிக் கொண்டு அவரது வண்டி super XL ல் சென்றார். மறுநாள் திங்கட்கிழமை காலை மேற்படி மாயாண்டியின் மனைவி எனக்கு போன் செய்து உங்கள் கடைக்கு வேலைக்கு வந்த கணவர் இன்னும் வீட்டிற்கு வரவில்லை என்று கூறி கேட்டார். நானும்,

அவர் தம்பி, அவரது குடும்பத்தார் சேர்ந்து தேடினோம். மாயாண்டி கிடைக்கவில்லை. அதன் பிறகு தச்சநல்லூர் காவல்நிலையம் சென்று மாயாண்டியின் மனைவி புகார் கொடுத்தார். நான் உடன் சென்றேன். மாயாண்டி ரூ.8000 பணம் வாங்கும்போது ஒரு ஆட்டுத்தோலை கொடுத்து பழனி என்பவரிடம் கொடுக்க சொன்னேன். அதன் பிறகு நான்கு நாட்கள் கழித்து தாழையூத்து சிதம்பர நகரில் மாயாண்டி இறந்து கிடப்பதாக சொன்னார்கள். ஆஜர் எதிரி என் ஆட்டுக்கறி கடையில் ஒரு வருடத்திற்கு முன்பு வேலை பார்த்தார். அதனால் அவரை எனக்குத் தெரியும். அவரும் மீனாட்சிபுரத்தில் குடியிருந்து வந்தார். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

எனது வீடு திருநெல்வேலி ஜங்ஷன் மீனாட்சிபுரத்தில் உள்ளது என்றால் சரிதான். எனது கறிக் கடை தச்சநல்லூர் வெல்கம் மண்டபம் பக்கத்தில் உள்ளது. அங்கு நான் 15 வருடங்களாக கறிக் கடை வைத்துள்ளேன். கறிக் கடையில் மட்டன் மட்டும் தான் விற்பனை செய்வேன். சிக்கன் விற்பனை செய்வதில்லை. கறிக் கடை நடத்துவதற்கு எனக்கு லைசென்ஸ் எதுவும் இல்லை. கடை நடத்தும் இடம் எனக்கு வாடகை இடம். அந்த இடத்திற்கு சொந்தக்காரர் ஒரு செட்டியார். பெயர் தெரியாது. அந்த கடைக்கு நான் வாடகை எதுவும் கொடுப்பதில்லை. என் கடையில் நான் மட்டும் தான் வேலை செய்வேன். நல்ல நாள் தீபாவளி வரும்போது கடையில் 2 பேரை வேலைக்கு வைத்துக் கொள்வேன்.

அவ்வாறு வேலை செய்பவர்களுக்கு தீபாவளி, பொங்கலுக்கு ரூ.2000 கொடுப்பேன். தீபாவளி, பொங்கலைத் தவிர மற்ற நாட்களில் வியாபாரத்தை



நானே பார்த்துக் கொள்வேன். எனது வீட்டிலிருந்து கறிக் கடைக்கு 7 கி.மீ. தூரம் இருக்கும். வாரத்தில் புதன், சனி, ஞாயிறு 3 நாட்கள் தான் கடை நடக்கும். அந்த 3 நாட்களும் காலை 6 மணிக்கு கடைக்கு சென்றுவிட்டு மதியம் 12 மணி வரை அங்கு இருப்பேன். இறந்தவரின் மனைவியுடன் தச்சநல்லூர் காவல்நிலையத்திற்கு நான் போனேன். தச்சநல்லூர் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க இறந்தவரின் மனைவி, என்னையும் சேர்த்து சுமார் 5, 6 பேர்கள் போனோம் என்றால் சரிதான். தச்சநல்லூர் காவல்நிலையத்தில் இன்ஸ்பெக்டரிடம் இறந்தவரின் மனைவி தான் புகார் கொடுத்தார். அது எந்த தேதி என்றால் மறுநாள் திங்கட்கிழமை என்று சாட்சி கூறுகிறார். 27.6. என்று கேட்டால் சாட்சி ஆம் என்று கூறுகிறார். தேதி எதுவும் தெரியாது என்றும், தேதியை நான் கையில் எழுதி வைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சாட்சி இல்லை என்று கூறுகிறார். (சாட்சி கையை பார்க்கும்போது 26.6. என்று தேதி எழுதப்பட்டுள்ளது.) எனக்கு சம்பவம் பற்றியோ, எதிரி மற்றும் சாட்சி யாரும் தெரியாது என்றும், என்னை நிர்பந்தப்படுத்தி பொய் சாட்சியம் அளிக்க வைத்திருக்கிறார்கள் என்றும், அதனால் தான் நான் தேதியை கையில் எழுதி வைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. இறந்து போன நபர் என் கறிக் கடைக்கு எத்தனை மணிக்கு வந்தார் என்றால் காலை 6 மணிக்கு வந்தார். நானும், இறந்தவரின் மனைவியும் எங்கெல்லாம் அவரை தேடிப் பார்த்தோம் என்றால் ஜங்ஷன், சிந்துபூந்துறை, மேலகரை ஆகிய இடங்களில் தேடிப் பார்த்தோம். எந்தெந்த கிராமங்களில் தேடிப் பார்த்தோம், எந்தெந்த நபர்களை விசாரித்தோம் என்ற

விவரங்களை போலிஸ் விசாரணையின் போது நான் சொல்லவில்லை. காவல்நிலையத்திற்கு சென்றபோது என்னுடன் இறந்தவரின் மனைவி,



அவரது தம்பி உடன் வந்தார்கள். மற்றவர்கள் யார் என்று எனக்குத் தெரியாது. நான் இறந்து போன மாயாண்டியிடம் பழனியிடம் கொடுக்க சொல்லி ரூ.8000/- கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பழனியோ, எதிரி மாரிமதனோ, இறந்து போன மாயாண்டி ஆகிய யாரையும் எனக்குத் தெரியாது என்றும், நான் உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மறுநாள் தச்சநல்லூர் காவல் ஆய்வாளரிடம் இறந்தவரின் மனைவி புகார் கொடுக்கும் போது காலை 8 முதல் 8.30 மணி இருக்கும். தச்சநல்லூர் காவல்நிலையத்தில் ஆய்வாளர் எழுதிக் கொண்டு இறந்து போனவரின் மனைவியிடமும், அவரது தம்பியிடமும் கையெழுத்து வாங்கினார் என்றால் சரிதான். இறந்து போன நபர் சம்பவ தினத்தன்று போன வண்டி XL வண்டி. வண்டியின் நம்பர் எனக்குத் தெரியாது. போலிஸ் என்னை விசாரிக்கும்போது நான் வண்டியின் எண் சொல்லவில்லை. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***
***SESSIONS CASE NO.495/ 2022***

Deposition of Witness for Prosecution :: **P.W.7**

| | | |
|---|---|---|
| பெயர் | – | இசக்கிமுத்து |
| தந்தை பெயர் | – | ராமன் |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tr. P.Maridoss in accordance with the Provisions of Act X of 1873 on **the 10th day of September 2024.**

(Accused present.)
(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் தற்போது கட்டாரங்குளம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு தாழையூத்து கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது 2.7.2022ம் தேதி தாழையூத்து ஆய்வாளர் என்னை அழைத்தார். அதன் பேரில் நானும், தலையாரி கன்னையாவும் தெற்கு மலை காலனி பஸ் ஸ்டாப் பக்கம் சென்றோம். அங்கு ஆய்வாளர், போலீஸ் பார்ட்டி இருந்தார்கள். மாயாண்டி கொலை சம்பந்தமாக ஒரு நபரை உங்கள் முன்பு விசாரணை செய்ய வேண்டும் என்று வரச் சொன்னார். தெற்கு மலை பஸ் ஸ்டாப் பக்கம் நானும் தலையாரியும் சென்றோம். நாங்கள் போகும்போது ஆஜர் எதிரியை விசாரித்து கொண்டிருந்தார்கள். விசாரித்து எதிரி சொன்ன தகவலை போலிஸ் ஸ்டேட்மெண்ட் எழுதினார்கள். அதன் பிறகு அந்த ஸ்டேட்மெண்டில் என்னிடம்

கையெழுத்து வாங்கினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2. அதனை தொடர்ந்து சிதம்பர நகர் ஹவுசிங் போர்டு சென்று ஆயுதத்தை எடுத்த விவரம் தான் எனக்குத் தெரியும். இடையில் நடந்தது எனக்குத் தெரியாது. ரூ.1500 ம், TVS XL வண்டியும் வாக்குமூலம் கொடுத்த இடத்திலேயே எதிரியிடம் இருந்து வாங்கினார்கள். வாங்கிய வண்டியையும், ரூபாயையும் கைப்பற்றியதற்காக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அத்தாட்சி அ.சா.ஆ.3. அத்தாட்சியில் கைப்பற்றிய TVS XL வண்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளது. அந்த வண்டி சா.பொ.4. அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட ரூ.500 நோட்டுக்கள் 3 defacto complainant வசம் நீதிமன்றம் மூலமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. அப்போது புகைப்படம் எடுத்து புகைப்படம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த பணத்தின் புகைப்பட நகல் அ.சா.ஆ.4. அதன் பிறகு சம்பவ இடத்திற்கு சென்றோம். சம்பவ இடத்தில் இருந்த புதரில் இருந்து ஆஜர் எதிரி ஒரு கல்லை எடுத்து ஆஜர்படுத்தினார். அந்த கல்லை எடுத்தது சம்பந்தமாக ஆய்வாளர் எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.5. எதிரி எடுத்து ஆஜர்படுத்திய கல் தற்போது என்னிடம் காட்டப்படுவது தான். அது சா.பொ.5. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–

தாழையூத்து கிராம நிர்வாக அலுவலராக நான் 2021 ஜீலை முதல் பணிபுரிந்தேன். 2023 ஜீலை மாதத்தில் அங்கிருந்து மாறிவிட்டேன். தாழையூத்து கிராம நிர்வாக அலுவலகம் தாழையூத்து பஞ்சாயத்து அலுவலகம் அருகில் உள்ளது. நான் குடியிருப்பது ராமையன்பட்டி என்ற கிராமத்தில் குடியிருந்து வந்தேன். என்னுடைய அலுவலக நேரம் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை. அன்றையதினம் போலிசார் என்னை செல்போனில் தான் கூப்பிட்டு தலையாரியை அழைத்துக் கொண்டு வரச்சொன்னார் என்றால் சரிதான். அப்போது நான் என்னுடைய வீட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல. ஆபிசில் தான் இருந்தேன். அப்போது ஒரு நபரை விசாரிக்க வேண்டும் என்றும் நீங்கள் சாட்சி போட வாங்க என்றும் சொன்னார்கள். என்னிடம் காட்டப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் ஆய்வாளர் என்னிடம் கொடுத்தார். அதை எழுதியது யார் என்று எனக்குத் தெரியாது. தெற்கு மலை காலனி பஸ் ஸ்டாப்பில் இருந்து நாங்கள் கிளம்பியபோது மாலை சுமார் 5 மணி இருக்கும். அதன் பிறகு நாங்கள் ஹவுசிங் போர்டு சென்றோம். ஹவுசிங் போர்டு சென்று விட்டு நான், தலையாரி மற்றும் ஆய்வாளர் காவல்நிலையத்திற்கு வரும்போது மாலை சுமார் 6 மணி இருக்கும். நான் அன்றையதினம் அங்கு என்னவெல்லாம் நடைபெற்றதோ அதைப் பொறுத்து என்னுடைய உயரதிகாரியான தாசில்தாருக்கு தகவல் சொன்னேன். எழுத்து மூலமாக தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. வாய்மொழியாகத் தான் கொடுத்தேன். என்னுடைய உயரதிகாரிகளுக்கு எழுத்து மூலமாகத் தான் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியவில்லை. எங்களுக்கு கிராம நிர்வாக அலுவலர் பயிற்சியின் போது சட்டம் ஒழுங்கு

பிரச்சினை வரும்போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லி கொடுத்திருக்கிறார்கள். நான் 02.7.2022 அன்று நானும் எனது தலையாரியும் தெற்கு மலை காலனி பஸ் ஸ்டாப் பக்கம் போகவில்லை என்றும், போலிஸ் அதிகாரிகளை பார்க்கவில்லை என்றும், எந்தவிதமான பொருட்களையும் பணத்தையும் கைப்பற்றவில்லை என்றும், ஹவுசிங் போர்டு காலனி பக்கம் செல்லவில்லை என்றும், அன்றைய தேதியில் காண்பிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் காவல்நிலையத்தில் வைத்து தான் நான் கையெழுத்து செய்தேன் என்றும், நான் உண்மைக்குப் புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு பற்றிய விவரங்கள் எதுவும் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. காவல் துறை அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், அதன் பேரில் உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த சமயத்தில் காவல்துறை அதிகாரிகளுடன், என்னையும் தலையாரியும் தவிர வேறு யாரும் ஊர் பொதுமக்கள் இருந்தார்களா என்றால் நான் கவனிக்கவில்லை. நான் சொன்னது போன்று எதிரி எந்தவித ஸ்டேட்மெண்டும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த இடத்திலேயே எதிரி கிடையாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***

***SESSIONS CASE NO.495/ 2022***

Deposition of Witness for Prosecution :: **P.W.8**

| | | |
|---|---|---|
| பெயர் | – | பூல்பாண்டி |
| தந்தை பெயர் | – | மாடசாமி |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tr. P.Maridoss in accordance with the Provisions of Act X of 1873 on **the 10th day of September 2024.**

(Accused present.)

(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் தாழையூத்தில் சங்கர் நகர் ராம் நகரில் குடியிருந்து இறைச்சிக் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். 01.7.2022ம் தேதி மாலை 4 மணிக்கு நான் வாக்கிங் போனேன். அந்த இடத்தில் ஒரு நபர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று சொன்னார்கள். அதனால் நான் பார்ப்பதற்காக போனேன். அங்கு இன்ஸ்பெக்டர் சார் நின்று கொண்டிருந்தார். அந்த இடத்தில் பிளான் போட்டுக் கொண்டிருந்தார்கள். அதில் கையெழுத்து போடுமாறு இன்ஸ்பெக்டர் சொன்னார். இன்னொரு கையெழுத்து போடுமாறு சொன்னார். எதற்கு என்று கேட்டேன். கூடையும், நரம்பு கயிறு, மற்றும் மண் கொஞ்சம் அள்ளி வைத்திருப்பதாகவும் அதற்காக கையெழுத்து போடுமாறு சொன்னார். அதனால் நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும்

அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகசர் அ.சா.ஆ.6. அத்தாட்சி அ.சா.ஆ.7. என்னுடன் என் சித்தப்பா வேலு என்பவரும் கையெழுத்து போட்டார். போலிசார் கைப்பற்றிய மஞ்சள் நிற கயிறு என்னிடம் காட்டப்படுவது தான். என்னிடம் காட்டப்படும் இரத்தம் பட்ட மண், இரத்தம் படாத மண் ஆகியவை அன்றையதினம் போலிசார் கைப்பற்றியது தான். ரத்தம் பட்ட மண் சா.பொ.6. ரத்தம் படாத மண் சா.பொ.7. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

நான் தென்கலம் விலக்கில் கறிக் கடை வைத்து நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். கறிக் கடை நடத்துவதற்கு பஞ்சாயத்தில் இருந்து லைசென்ஸ் வாங்கியுள்ளேன். லைசென்ஸ் நம்பர் எனக்குத் தெரியாது. லைசென்ஸ் வாங்காமல் கறிக் கடை நடத்தினால் சட்டத்திற்கு புறம்பானது என்று எனக்குத் தெரியும். நான் வாக்கிங் போகும் போது தான் போலிசார் என்னை கூப்பிட்டார்கள் என்ற விவரத்தை போலிஸ் விசாரிக்கும்போது கூறியுள்ளேன். என் சொந்த வேலை எதுவும் கிடையாது. அங்கு வைத்து போலிசார் படம் மட்டும் போட்டார்கள். அந்த படம் போட்ட பேப்பரில் நான் கையெழுத்து போட்டேன். அதன் பக்கத்தில் நிறைய வீடுகள் உள்ளது. போலிஸ் ஸ்டேசனுக்கு போய் கையெழுத்து எதுவும் போடவில்லை. கையெழுத்து போட்ட பிறகு இந்த வழக்கு சம்பந்தமாக இன்று தான் முதன் முதலில் இந்த நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரிதான். அந்த இடத்தின் சர்வே நம்பர் எனக்குத் தெரியாது. அந்த இடத்தின் சர்வே நம்பர் 476/1 என்று நான் போலிஸ் என்னை விசாரித்தபோது சொல்லவில்லை. நான் வாக்கிங் சென்றதாகவும், போலிசார் படம் போட்டதாகவும், அதில் நான் கையெழுத்து போட்டதாகவும், என் முன்பு போலிசார் கயிறு, மண்

ஆகியவற்றை கைப்பற்றியதாகவும் உண்மைக்குப் புறம்பாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்பட்டு நான் போட்டதாக சொல்லப்படும் கையெழுத்துக்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்காக நான் போட்ட கையெழுத்துக்கள் என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கு பற்றி ஒன்றும் தெரியாது என்றும், நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை